<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C. 39/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 05.02.2026.**

| | |
|---|---|
| **Name : பிரசாத்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025 ம் தேதியன்று இரவு 11.35 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.பாலசுந்தர் வயது 33, த/பெ அய்யாவு என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 12.01.2025 –ம் தேதி இரவு 07.15 மணிளவில் ஒரு அடையாளம் தெரிந்த ஆண் நபர் கை மற்றும் காலால் வீரக்கல்புதூர் என்ற இடத்தில் தாக்கியதாக சொன்னார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு அ.சா.ஆ.2.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) வெளிக்காயம் எதுவும் இல்லை என்றால் ஆமாம். சிகிச்சை பெற்றவர் காவலர் என்றால் ஆமாம். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் இரவு 7.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக கூறினார். இரவு 11.35 மணிக்கு

சிகிச்சைக்காக சேர்ந்தார். உடல் வலி இருப்பதாக வேண்டுமென்றே கூற வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.என்னிடம் அவர் ஒரு நபர் கைகளாலும், காலாலும் தாக்கியதாக சொல்லியுள்ளாரே தவிர உடம்பில் எந்த இடத்தில் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**